## எங்கு பார்த்தாலும் ஊழல்! மிகப் பெரிய மாற்றம் எனச் சொல்லி

# ஏமாற்றத்தைத்தான் த.வெ.க. அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது!

### சென்னை கிழக்கு மாவட்டத்தில் கலைஞர் நினைவு நாள் நிகழ்ச்சியில்

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!





சென்னை,ஆக.26 -

**எங்கு பார்த்தாலும் ஊழல்! மிகப் பெரிய மாற்றம் எனச் சொல்லி ஏமாற்றத்தைத்தான் த.வெ.க. அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது! என்று சென்னை கிழக்கு மாவட்டத்தில் கலைஞர் நினைவு நாள் நிகழ்ச்சியில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.**

**சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில், துறைமுகம் தொகுதியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு, கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி - அன்னை தயாளு அம்மாள் தொண்டு நிறுவனத்தில் பயிற்சி முடித்த மகளிர் - மாணவர்கள் - விளையாட்டு வீரர்கள் - மாற்றுத் திறனாளிகள் - திருநர் உள்ளிட்டோருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி, வாழ்த்திப் பேசினார். இதில் ஏராளமான பொதுமக்களும் கழக முன்னணியினரும் கலந்துகொண்டனர்.**

**விழாவில் கலந்துகொண்டு, கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப்பேரவைஎதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பாக, இன்றைய தினம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள். கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு கல்வி ஊக்கத் தொகை மற்றும் உபகரணங்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு திரள்நிதி மற்றும் புத்தாடை, திருநங்கைகளுக்கு புத்தாடை மற்றும் சிறப்பு செய்தல், விளையாட்டு குழுக்களைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல், இவற்றுடன் சேர்த்து, தையல் படிப்பை முடித்த சகோதரிகள் 300 பேருக்கு தையல் இயந்திரம், மாற்றுத் திறனாளி சகோதர, சகோதரிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி என்று இன்றைக்கு மட்டும் இந்த மேடையில் 1,500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியை அண்ணன் சேகர்பாபு அவர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார்.

இதில் கலந்துகொள்ள வாய்ப்பளித்த அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு முதலில் என் நன்றியை, வணக்கத்தை பயனாளிகள் உங்கள் அத்தனை பேரின் சார்பாகவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### போராளிகள் வீழ்வதில்லை

`போராளிகள் சாவதில்லை, போராளிகள் வீழ்வதில்லை' என்ற தலைப்பில், அண்ணன் சேகர்பாபு அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளார். தொடர்ந்து 10 நிகழ்ச்சிகள் 9-வது நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ளேன்.

கலைஞரின் நினைவு நாளை முன்னிட்டு, இந்த 10 நிகழ்ச்சிகளையும் அண்ணன் சேகர்பாபு அவர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார். கலைஞர் தன் வாழ்நாள் முழுவதும் அனைத்து மக்களின் எழுச்சிக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் தன் இறுதி மூச்சி வரை வாழ்ந்தவர். இன்று அவர் வழியில் மாணவர்கள், மகளிர், மாற்றுத்திறனாளிகள், மூத்த குடிமக்கள், திருநர்கள், கழக மூத்த முன்னோடிகள் என்று அனைத்து தரப்பினரும் பயன்பெறுகின்ற வகையில், இந்த நிகழ்ச்சி சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார். இதுபோன்ற நலத்திட்ட நிகழ்ச்சிகள், நூற்றுகணக்கான நிகழ்ச்சிகளை அண்ணன் சேகர்பாபு அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார்கள். நானே பல நிகழ்ச்சிகளில் இதே அரங்கத்தில் கலந்துகொண்டுள்ளேன். அதனால் நாம் இதை ஏதோ புதிதாக இன்றைக்குக் கொடுக்கவில்லை.

### மக்களோடு மக்களாக நிற்கும் இயக்கம்

அண்ணன் சேகர்பாபு அவர்கள் சொன்னது போல ஆளுங்கட்சியாக இருந்தபோதும் கொடுத்திருக்கிறோம், இப்போது எதிர்க்கட்சியாக இருக்கின்றபோதும் அதைவிட வேகமாகச் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால், ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, எந்த வரிசையில் நின்றாலும் சரி, என்றைக்குமே மக்களோடு மக்களாக நிற்கக்கூடிய இயக்கம் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்.

அதைத்தான் கலைஞர் அவர்கள் நமக்குக் கற்றுக் கொடுத்தார். நம்முடைய தலைவர் அவர்கள் அதைச் சொல்லித்தான் நம்மை வளர்த்திருக்கிறார்.

குறிப்பாக, இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருக்கின்றவர்களைப் பற்றி நான் உங்களிடம் சொல்லத் தேவையில்லை. எல்லாரும் இன்றைக்கு நேரலையில் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

இன்றைக்கு ஆளுங்கட்சியாக வந்திருக்கக்கூடியவர்கள் எப்படி இந்த நிலைமைக்கு வந்தார்கள் என்பதை நாம் யோசித்துப்பாரக்க வேண்டும். தேர்தலில் நாம் எதிர்பார்த்தது ஒரு பெரிய வெற்றி. மீண்டும் `திராவிட மாடல் 2.0 ஆட்சி' அமையும் என்று நம்பிக்கையோடு இருந்தோம். ஆனால் என்ன செய்துவிட்டோம்? தேர்தலில் நமக்கு யார் எதிரி என்று தெரியாமல் போய் சண்டை போட்டுவிட்டோம். இன்றைக்கு எதிரி யார் என்று தெரிந்துவிட்டது. மீண்டும் அந்தத் தவறினை நாம் செய்யமாட்டோம், செய்யமாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இன்னும் குறிப்பிட்டுச் சொன்னால் இந்த கிழக்கு மாவட்டத்தில் மாதம் ஒரு நிகழ்ச்சிக்கு வந்து நான் கலந்துகொண்டு இருக்கிறேன். ஆனால், ஒரு சிறிய இடைவேளை. நான்கு மாதங்களுக்குப் பிறகு சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு வந்திருக்கிறேன்.

### கவர்ச்சியால் கிடைத்த வெற்றி

அண்ணன் சேகர்பாபு அவர்கள் நினைத்துக் கொள்ளலாம், நான் அவர் மீது கோபமாக இருக்கிறேன், அதனால் வரவில்லை என்றுகூட அவர் மனதில் தோன்றியிருக்கலாம். அது கோபம் இல்லை. அது வருத்தம். வருத்தம் மட்டும் இல்லை, அவர் மீது, இந்த மாவட்டத்தின் மீது எனக்கு இருக்கக்கூடிய ஒரு உரிமை. எத்தனையோ காரணங்கள் சொல்லலாம். வெற்றி வாய்ப்பை நாம் இழந்ததற்கு எத்தனையோ காரணங்களை நாம் தேடிக் கண்டு பிடித்துவிடலாம்.

சினிமா மாயை, கவர்ச்சி, இளம் தலைமுறையினர் சமூக ஊடகங்களிலும் கைபேசியிலும் முழுக்க முழுக்க ஒரு கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டு திராவிட மாடல் அரசின் திட்டங்கள், நம் தலைவரின் திட்டங்கள் எல்லாம், சாதனைகள் எல்லாம் இந்த இளம் தலைமுறையோடு சென்றடையவில்லை. அதனால் வெற்றி வாய்ப்பை இழந்துவிட்டோம். இப்படி எத்தனையோ காரணங்களைச் சொல்லி நம்மை நாமே சமாதானப் படுத்திக்கொள்ளலாம். யார் எவ்வளவு சொன்னாலும், கொளத்தூர் தொகுதியில் தோல்வியை, வெற்றி வாய்ப்பை இழந்திருக்கிறோம். கொளத்தூர் தொகுதியின் தோல்வியை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியுமா?

அந்தத் தோல்வியை தயவுசெய்து யாரும் மறந்துவிடக் கூடாது. அதை நமக்கெல்லாம் ஒரு மிகப்பெரிய பாடமாக நாம் நம் மனதில் எடுத்துக்கொள்ள வேண்டும். அடுத்த தேர்தலில் நிச்சயம் அந்தத் தோல்விகளையெல்லாம் மிகப்பெரிய வெற்றியாக மாற்றிக் காட்ட வேண்டும். கிழக்கு மாவட்ட மக்கள், நிச்சயம் அதைச் செய்து காட்டுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

### மிகப்பெரிய தேர்தல் விபத்து

இன்றைக்கு அவர்கள் ஆட்சியைப் பிடித்திருக்கலாம், முதலமைச்சர் பொறுப்பில் அமர்ந்திருக்கலாம், அமைச்சர்கள் எல்லாம் அமர்ந்திருக்கலாம். ஆனால், ஆட்சிக்கு வருவதற்கு முன்னால், அவர்களுக்கே ஆட்சிக்கு வருவோம் என்ற நம்பிக்கை இல்லை. ஒரு மிகப்பெரிய விபத்து போல, இந்தத் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. ஏன், இன்னும் சொல்லப்போனால் மக்கள் முழுமையாக அவர்களைத் தேர்ந்தெடுக்கவில்லை. முழு பெரும்பான்மையோடு அமர்ந்திருக்கிறார்களா என்று பார்த்தீர்கள் என்றால் அதுவும் கிடையாது.

ஒரு கட்சி ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்றால், 118 தொகுதிகளைப் பிடிக்க வேண்டும். இப்போது இருக்கக்கூடிய ஆட்சியாளர்கள் வெறும் 108 தொகுதிகளில் மட்டும் தான் வெற்றி பெற்றார்கள்.

### தலைவர் போட்ட பிச்சை

இன்னும் சொல்லப்போனால், நம்முடைய தலைவரின் பெயரைச் சொல்லி, நம்முடைய உடன் பிறப்புகள் களத்தில் வேலை பார்த்து வெற்றி பெற்றவர்களின் தயவில்தான் இன்றைக்கு இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.

நாம் தைரியமாகச் சொல்லலாம், நம்முடைய தயவில் தான் இன்றைக்கு இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. தலைவரின் தயவில்தான் இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. நம்முடைய தலைவர் போட்ட பிச்சையில்தான் இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.

வெற்றி வாய்ப்பை இழந்திருக்கிறோம். எத்தனை சதவிகித வாக்கு வித்தியாசம் தெரியுமா? வெறும் 3 சதவிகித வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை நாம் இழந்திருக்கிறோம். எப்படி ஆட்சியைப் பிடித்தார்கள்? ஆட்சிக்கு வந்ததும், தொடர்ந்து என்னென்ன நடந்தன என்பதை தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள். தண்டனை போல தினமும் ஆளுநரைச் சந்தித்துவிட்டு வந்து கொண்டிருந்தார், இன்றைக்கு இருக்கக்கூடிய முதலமைச்சர். இன்றைக்குக் கூப்பிடுவீர்களா, நாளைக்குக் கூப்பிடுவீர்களா என்று கேட்டுக்கொண்டே இருந்தார்.

ஏனென்றால், பெரும்பான்மை இல்லை. அதன் பிறகு அ.தி.மு.க-வில் இருக்கக்கூடிய சில தலைவர்களுக்கு, சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து சோஃபா சென்றது. சோஃபா பின்னாலேயே முதலமைச்சர் வால் பிடித்துக்கொண்டு சென்றார்.

அ.தி.மு.க தலைவர்களுக்கு மட்டும் இல்லை, நம்முடன் கூட்டணி வைத்துக்கொண்ட, நம்முடன் சேர்ந்து தேர்தலில் வெற்றிபெற்ற சில கட்சித் தலைவர்களுக்கும் சோஃபா சென்றது. ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் என்ன சொன்னார்கள்? `ஊழலை ஒழிப்போம், ஒரு மாற்றத்தை உண்டாக்குவோம்' என்று சொல்லி ஆட்சிக்கு வந்தார்கள். ஆனால், இன்றைக்கு வந்து என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

நம் தலைவர் கொண்டு வந்த திட்டங்களின் பெயர்களை மாற்றிக்கொண்டு, இருக்கிறார்கள். மாற்றம் மாற்றம் என்று சொல்லி, இன்றைக்கு இந்த ஆட்சியில் பெயர் மாற்றம் நடந்து கொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் ஊழல். மிகப்பெரிய மாற்றம் மாற்றம் என்று சொல்லி, இன்றைக்கு மிகப்பெரிய ஒரு ஏமாற்றத்தை இந்த அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது.

இன்றைக்கு இந்த ஆட்சி எந்த லட்சணத்தில் நடந்து கொண்டிருக்கிறது என்று நாம் கூட சொல்லவில்லை. அவர்களுடன் கூட்டணி வைத்திருக்கக்கூடிய, ஆதரவு கொடுத்திருக்கக்கூடிய கம்யூனிஸ்ட் இயக்கத் தோழர்கள் குரல் கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த ஆட்சியின் அநியாயத்தை எல்லாம் பேச ஆரம்பித்திருக்கிறார்கள்.

### ஆளுங்கட்சியினரே பாலியல் வன்முறை

தமிழ்நாட்டில் எங்கு பார்த்தாலும் இன்றைக்குச் சட்டம் ஒழுங்கு எந்த நிலைமையில் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். இன்னும் சொல்லப்போனால் ஆளுங்கட்சியின் நிர்வாகிகளே இன்றைக்குத் தொடர் கொலை, கொள்ளை, பாலியல் வன்முறையில் ஈடுபட்டு வருகிறார்கள். ஒரு பக்கம் விவசாயிகள் மிகப்பெரிய வேதனையில் மாட்டிக்கொண்டு இருக்கிறார்கள்.

இந்த ஆட்சி அமைந்து 105 நாட்கள் ஆகின்றது. இந்த 105 நாட்களில் அதிகமாகப் பாதிக்கப்படுவது யார் என்று பார்த்தீர்கள் என்றால், விவசாயப் பெருங்குடி மக்கள்தான்.

தேர்தல் வாக்குறுதியில் என்ன சொன்னார்கள்? வாங்கிய பயிர்க்கடன் அனைத்தையும் தள்ளுபடி செய்வோம். ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் எல்லாவற்றையும் புரட்டிப் போடுவோம். முழு பயிர்க்கடன் தள்ளுபடி என்று சொன்னார்களா இல்லையா?

இன்றைக்கு 25-வது நாள் ஓர் அறிவிப்பு, திரைப்படங்களுக்கு போஸ்டர் அடிப்பது போல 25-வது நாள் ஓர் அறிவிப்பு, 50-வது நாள் ஓர் அறிவிப்பு, 100-வது நாள் ஓர் அறிவிப்பு என்று முதலமைச்சர் கட்டம் கட்டமாக அறிவித்துக் கொண்டிருக்கிறார்.

விவசாயிகளின் பிரச்சினையைப் பேசியதற்காக என்னை கைது செய்தார்கள். அரசு செலவில் தஞ்சாவூர் வரை என்னை அழைத்துச் சென்று `ரோடு ஷோ' நடத்திக் காட்டியதுதான் இந்த அரசின் ஒரு சாதனை.

என்னை மட்டும் இல்லை, மூத்த உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர் பெருமக்களையெல்லாம் தொடர்ந்து கைது செய்துகொண்டு இருக்கிறார்கள்.

அதுமட்டும் இல்லை, இந்த ஆட்சியாளர்களின் கண்களை உறுத்துவது, இன்றைக்கு இளம் தலைமுறையினர் நிறைய பேர் நம் தலைவர் பக்கம், நம்முடைய கழகத்தின் பக்கம் ஈர்க்கப்பட்டு வருகிறார்கள். Gen-Z தலைமுறையினர் வருகிறார்கள், தொடர் கூட்டங்கள் நடத்துகிறார்கள். அவர்கள் மீதும் இலக்கு வைக்கப்பட்டு, இந்த ஆட்சியாளர்கள் தொடர்ந்து வழக்குகளைப் பதிவு செய்து அவர்களையும் கைது செய்துகொண்டு இருக்கிறார்கள்.

### துறை சார்ந்த அமைச்சர்கள் பேசுவதில்லை

இவற்றையெல்லாம் எதிர்த்துத்தான், இன்றைக்கு நாம் தமிழ்நாட்டு மக்களுக்காகத் தொடர்ந்து போராடிக் கொண்டு இருக்கிறோம், குரல் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். தமிழ்நாட்டு மக்களின் பிரச்சினைகளை நாங்கள் சட்டமன்றத்தில் எழுப்பிக் கொண்டு இருக்கிறோம். ஆனால், அதற்கு முதலமைச்சர் ஏதாவது ஒரு கேள்விக்குப் பதில் சொல்கிறாரா என்று நீங்கள் யோசித்துப் பாரக்க வேண்டும்.

ஒரு அமைச்சரவையில் கிட்டத்தட்ட 30 அமைச்சர்கள் இருக்கிறார்கள். ஆனால், இந்த அமைச்சரவையில் பார்த்தீர்கள் என்றால், வெறும் மூன்று அமைச்சர்கள்தான், எந்த அமைச்சருக்குக் கேள்வி கேட்டாலும், இந்த மூன்று அமைச்சர்கள்தான் பதில் சொல்வது வழக்கம்.

நான் தொடர்ந்து சொல்லிக்கொண்டு இருப்பது, அமைச்சர்கள் யார் என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஏனென்றால், ஒவ்வொரு துறைக்கும் அந்தத் துறை சார்ந்த அமைச்சர் பதில் சொன்னால்தான் நமக்குத் தெரியும். சட்டமன்ற உறுப்பினர்கள் யார் என்று தெரியவில்லை. இதனை நான் சொல்லும்போது கிண்டல் செய்கிறேன் என்று சொன்னார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு சட்டமன்ற உறுப்பினரே, அவையில் சொல்கிறார் நான் சட்டமன்ற உறுப்பினர் என்று சொன்னா வெளியில் நம்ப மாட்டேன் என்கிறார்கள் என்றே சொல்கிறார். இப்படிப்பட்ட ஒரு ஆட்சி இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது.

### திசைத்திருப்பும் உத்தி

கேள்வி எழுப்பினால் எந்தத் துறை அமைச்சரிடமும் அது சம்பந்தமான பதிலே கிடையாது. திசைத்திருப்பும் உத்திதான், மடை மாற்றும் உத்தியைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு சட்டமன்றத்தில் என்ன நடந்தது என்பதைப் பார்த்திருப்பீர்கள். முன்னாள் அமைச்சர் அண்ணன் செந்தில் பாலாஜி அவர்கள் மின்வெட்டுப் பிரச்சினையைப் பற்றிப் பேசிக் கொண்டு இருக்கிறார். மின்சாரக் கட்டணம் அதிகமாக வந்துள்ளது என்று ஒரு குற்றச்சாட்டை வைக்கிறார். ஆனால், அதற்குப் பதில் சொல்லத் துப்பில்லாத ஒரு அமைச்சர் எழுந்து, வேண்டுமென்றே அதை மடைமாற்றம் செய்ய, நம்மைச் சீண்டுவது போல சில வார்த்தைகள் பேசுகிறார். அதற்குத்தான் எழுந்து எழுந்து நாங்கள் பதில் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். அதுதான் இன்றைக்குத் தலைப்புச் செய்திகளாக வந்து கொண்டிருக்கின்றன.

### உண்மையாக என்ன தலைப்புச் செய்தி வந்திருக்க வேண்டும்?

தி.மு.க. குரல் கொடுத்தது, மக்கள் பிரச்சினையான மின்வெட்டுப் பிரச்சினை சம்பந்தமாக தி.மு.க குரல் கொடுத்தது, சட்டமன்றத்தில் பேசியது, இந்த அரசு என்ன பதில் சொன்னார்கள் என்பதுதான் தலைப்புச் செய்திகளில் வந்திருக்க வேண்டும். ஆனால் அன்று என்ன தலைப்புச் செய்தி வந்தது? 'உதயநிதியும் அமைச்சரும் மோதல்'. இது வந்திருக்க வேண்டுமா? இதனை யோசித்துப் பாருங்கள். இந்த அரசு அமைந்ததில் இருந்து முதல் நாளில் இருந்து முழுக்க முழுக்க திசைதிருப்பும் உத்திதான்.

நான்தான் பேரவைத் தலைவரிடமும் சொன்னேன். நாங்கள் ஒரு கேள்வி கேட்டால், நாங்களே வியக்கும் வகையில், எங்களைத் திருப்பிக் கேள்வி கேட்கிறீர்கள்.

வெளியில் பார்க்கின்ற மக்களுக்கு யார் ஆளுங்கட்சி, யார் எதிர்க்கட்சி என்பது என்னவென்றே புரியவில்லை. பொதுவாக, எதிர்க்கட்சிகள் கேள்வி கேட்பார்கள், ஆளுங்கட்சி அதற்கான பதிலைக் சொல்வார்கள். ஆனால், இங்கே அவையில் எங்களைப் பார்த்து ஆளுங்கட்சி கேள்வி கேட்கிறார்கள், நாங்கள் பதில் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். கேள்வி கேட்டால்கூட பரவாயில்லை, பதில் சொல்லிவிடலாம். பாட்டு பாடினால், நாங்கள் என்ன செய்வது?

சபாநாயகருக்கும் தெரியவில்லை. ஏனென்றால், அவரும் பாட்டு பாடுகிறார். எங்களுக்கே சந்தேகம் வந்துவிடுகிறது. நாங்கள் சட்டமன்றத்திற்குத்தான் வந்து இருக்கிறோமா, இல்லை `சூப்பர் சிங்கர்' நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறோமா?

### இப்படி ஒரு கேடுகெட்ட ஆட்சி

பொதுவாக ஒரு அரசு நடக்கும்போது, எதிர்க்கட்சிகள் வேகமாகப் பேசுவார்கள், நிறைய குற்றச்சாட்டுகள் வைப்பார்கள். அப்போது பேரவைத் தலைவர் எதிர்க்கட்சிகள் பேசுவதை அவைக்குறிப்பில் இருந்து தொடர்ந்து நீக்குவார்.

ஆளுங்கட்சியில் இருக்கக்கூடிய அமைச்சர்கள் பதில் சொல்வார்கள், வேண்டுகோள் விடுப்பார்கள். `பேரவைத் தலைவர் அவர்களே, தவறான வார்த்தையைப் பயன்படுத்துகிறார், அவைக்குறிப்பில் இருந்து நீக்குங்கள் என்று கோருவார்கள். ஆனால், இந்த அரசில் என்ன நடந்து கொண்டிருக்கிறது? இந்தச் சட்ட சபையில் என்ன நடந்து கொண்டிருக்கிறது? தயவுசெய்து கூர்ந்து கவனியுங்கள்.

சட்டசபை வரலாற்றிலேயே முதல்முறையாக, எதிர்க்கட்சியினர் நாங்கள் பேசுவதை விட, ஆளுங்கட்சியினர் பேசுவதை, அமைச்சர்கள் பேசுவதை, ஆளுங்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுவதை சபாநாயகர் அவைக்குறிப்பில் இருந்து தொடர்ந்து நீக்கிக் கொண்டே இருக்கிறார்.

அதுமட்டுமில்லை, பொதுவாக நீக்கும் போது என்ன சொல்வார்கள்? இப்போது நாங்கள் பேசும்போது சபாநாயகர் நீக்கிவிட்டார் என்றால் நாங்கள் கேட்போம், நான் என்ன தவறாகச் சொல்லிவிட்டேன்? அது ஒன்றும் மரபுக்கு மாறான வார்த்தை கிடையாது, தயவுசெய்து பரிசீலியுங்கள் என்று சொல்வோம். ஆனால் இப்போது இருக்கக்கூடிய அமைச்சர்கள் எல்லாம் என்ன செய்கிறார்கள்? பேசிக்கொண்டே இருக்கிறார்கள், பொய்க் குற்றச்சாட்டுகளை என் மீது வைக்கிறார்கள், வைத்துவிட்டு, பேரவைத் தலைவரிடம், அவர்களே `நீக்கிவிடுங்கள், நீக்கிவிடுங்கள்' என்று, சொல்லிவிடுகிறார்கள் இப்படிப்பட்ட ஒரு கேடுகெட்ட ஆட்சியை இதுவரைக்கும் தமிழ்நாடு பார்த்ததே கிடையாது.

### தலைவர் நேரலை கொடுத்தார்

இதில் நம்மிடம் சவால் வேறு விடுகிறார்கள். `பார்த்தீர்களா, நாங்கள்தான் முதன்முதலில் நேரலை கொடுத்தோம்' என்று பேசுகிறார்கள். நான் சொன்னேன், முதன் முதலாக சட்டப்பேரவை நிகழ்ச்சியை நேரலையில் கொடுத்ததே எங்களுடைய தலைவர், நம்முடைய அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு. 2021-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தவுடனே நம் தலைவர் நேரலை கொடுத்தார். கேள்வி நேரம் ஒவ்வொரு நாளும் ஒன்றரை மணி நேரம், 10 கேள்விகள், ஒவ்வொரு அமைச்சரும் இரண்டு மூன்று கேள்விகள், துணைக் கேள்விகள் கேட்பார்கள்.

ஆனால், இன்றைக்கு இந்த ஆட்சி அமைந்து இத்தனை நாள் ஆகிவிட்டது. கிட்டத்தட்ட நான்கு மாதங்கள் ஆகப்போகின்றது, இதுவரைக்கும் கேள்வி நேரத்தையே எடுப்பதற்குத் துப்பில்லாத ஒரு அரசு இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது.

நாங்கள் நேரலையை நிறுத்த வேண்டும் என்று சொல்லவே இல்லை. நேரலை ஒளிபரப்பிற்கு எதிராக நாங்கள் பேசவே இல்லை. கொடுங்கள், தயவுசெய்து கொடுங்கள். ஆனால், உங்களுடைய அமைச்சர்களைக் கட்டுப்படுத்துங்கள். உங்கள் அமைச்சர் சொல்கின்ற வார்த்தையை, சொல்கின்ற குற்றச்சாட்டுகளைப் சபாநாயகர் கட்டுப்படுத்த வேண்டும். ஏனென்றால் இஷ்டத்திற்குப் பேசிவிடுகிறார்கள்.

எதற்கு எடுத்தாலும் நம்மைக் குறை சொல்வது. நாம் ஏதாவது ஒரு கேள்வி கேட்டால் அவர்கள் உடனே என்ன தெரியுமா சொல்கிறார்கள்? தி.மு.க ஆட்சியில் இது நடக்கவில்லையா? எங்கள் ஆட்சியின் மீது குறை இருக்கிறது என்றுதானே மாற்றம் என்று சொல்லிக் கொண்டு, மக்கள் உங்களை அமர வைத்திருக்கிறார்கள்? அதற்குப் பதில் சொல்லுங்கள் என்றால், அதை மடைமாற்ற வேண்டியது. இதனைத் தொடர்ந்து இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. அதுமட்டுமில்லை, இரண்டு நாட்களுக்கு முன்பு, ஆனால் இது மூன்று மாதமாகச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஃபைல் தயாராக இருக்கிறது, திறந்துவிடுவோம்.

இரண்டு நாட்களுக்கு முன்பு முதலமைச்சரே சொல்கிறார், மூன்று ஃபைல் தயாராக இருக்கின்றன, என் மேசைக்கே வந்துவிட்டன, மேசையின் மேலேயே வைத்திருக்கிறேன், அதைத் திறக்க வைத்துவிடாதீர்கள் என்று. திறங்கள், யார் உங்களை நிறுத்தியது? அதாவது மிரட்டுகிறாராம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சோஃபா கொடுத்தார் அல்லவா, அதுபோல ஃபைல் என்று மறைமுகச் சொல் வைத்து நம்முடைய முன்னாள் அமைச்சர்களை, சட்டமன்ற உறுப்பினர்களை மிரட்ட முயற்சிக்கிறாராம்.

### வாயைத் திறக்கவில்லை

வெள்ளிக்கிழமை அன்று நான் போயிருந்தேன். அவர் அன்று பேசும்போது நான் அவையில் இல்லை. அடுத்த நாள் நான் சென்றிருந்தேன், அவர் அவைக்கு வரவில்லை. அதன் பிறகு அடுத்த நாள் நான் காலையில் சென்றுவிட்டேன். நம் அமைச்சர்கள் எல்லாம் பேசுங்கள். நான் சொன்னேன் ஃபைல் விஷயம் என்று ஒன்று சொல்லி இருக்கிறாரே முதலமைச்சர், அதைப்பற்றிப் பேச வேண்டும் என்றவுடனே, நான் சொன்னேன் அவர் வரட்டும். அவரை வைத்துக்கொண்டே கேட்போம், அவர் தானே சொன்னார் என்று முதலமைச்சர் வந்தவுடனே எழுந்து கேட்டேன். இதுவரைக்கும் வாயைத் திறக்கவில்லை.

தைரியம் இருந்தால் திறந்து பாருங்கள் ஃபைலை. இந்த மிரட்டல்களுக்கெல்லாம் நாங்கள் பயப்பட மாட்டோம். ஏன் திறக்க மறுக்கிறீர்கள்? ஜோசியக்காரர் சொன்னால்தான் திறப்பீர்களா? என்று கேட்டேன். அதையும் நீக்கிவிட்டார்கள். ஜோசியக்காரர் என்பதை நீக்குகிறோம். ஏங்க, ஜோசியக்காரர் அப்பாயின்மெண்டை நீக்கினீர்கள், ஜோசியக்காரர் என்கிற வார்த்தையையும் இப்போது நீக்கிவிட்டீர்கள். பரவாயில்லை. ஆனால், தயவுசெய்து முதலமைச்சரிடம் வேண்டுகோள், அந்த மூன்று கோப்புகளையும் சீக்கிரமாகத் திறந்து பாருங்கள்.

இந்த மிரட்டுகின்ற வேலையையெல்லாம் தி.மு.க.காரனிடம் வைத்துக்கொள்ளாதீர்கள், இதற்கெல்லாம் நாங்கள் பயப்பட மாட்டோம் என்று சொல்லிவிட்டு வந்தேன். இது நடந்தது சென்ற வெள்ளிக்கிழமை.

கிட்டத்தட்ட 72 மணி நேரம் ஆகிவிட்டது. நான் கூட இந்த முதலமைச்சருக்குக் கொஞ்சமாவது சூடு, சொரணை இருக்கும் என்று நினைத்துக்கொண்டு இன்றைக்குச் சபைக்குச் சென்றுவிட்டேன். எங்கள் இல்லத்தில் ஒரு குடும்பத் திருமணம் முடித்துவிட்டு 10 மணிக்கெல்லாம் சட்டமன்றத்திற்குச் சென்றுவிட்டேன். இன்றைக்கு முதலமைச்சர் இந்தக் கோப்பைப் பற்றி வாய் திறப்பார், இல்லை திறந்து பார்த்தேன், ஏதாவது சொல்வார் என்று பார்த்தால் வாயையே திறக்கவில்லை. ஏனென்றால், அவர்களுக்குத் தெரியும், தி.மு.க மீது எந்தக் குற்றச்சாட்டையும் வைக்க முடியாது. பொய்க் குற்றச்சாட்டுகளை மட்டும்தான் வைக்க முடியுமே தவிர, எதையும் நிரூபிக்க முடியாது, நம் தலைவர் மீது எந்தக் குற்றமும் சுமத்த முடியாது. பூச்சாண்டி காட்டுகிறார்கள், அதுவும் நம்மிடம்.

நான் இங்கே உங்களைப் பார்த்துக் கேட்கிறேன். இப்போது இருக்கக்கூடிய அமைச்சர்கள், இரண்டு மூன்று அமைச்சர்களைத் தவிர, உங்களுக்கு யாராவது அமைச்சர்களின் பெயர் தெரியுமா? போகின்ற இடத்தில் எல்லாம் பட்டப்பெயர் வைத்துத்தான் கூப்பிடுகிறார்கள். பட்டப்பெயர் சொன்னால்தான் இன்றைக்கு எல்லோருக்கும் தெரிகிறது.

பிளாக் டிக்கெட் விற்ற அமைச்சர், லாட்டரி சீட்டு அமைச்சர், முறுக்கு அமைச்சர், திருட்டு வி.சி.டி விற்கின்ற அமைச்சர், உருட்டுக்கட்டை அமைச்சர், சங்கி அமைச்சர், இப்போது அவர் பிரபலமாகிவிட்டார். பவுடர் அமைச்சர், கழிப்பறை அமைச்சர், அதற்கு மேல் சொல்ல முடியாது, இதையெல்லாம் அவைக்குறிப்பில் இருந்து நீக்கிவிடுவார்கள். யார் சட்டமன்ற உறுப்பினர் என்று தெரியவில்லை, யார் அமைச்சர் என்று தெரியவில்லை, யார் எந்தத் தொகுதியில் நின்று வெற்றிபெற்றார் என்று அவர்களுக்கே தெரியவில்லை. தவறான தொகுதிக்குச் சென்று நன்றி சொல்லிக்கொண்டு இருக்கிறார்.

### கார் வாங்க பணம் எப்படி வந்தது?

எங்களுக்கு மட்டும் இல்லை, அங்கே அமர்ந்திருக்கிறாரே முதலமைச்சர், சத்தியமாக அவருக்கும் தெரியாது. வாய்ப்பே கிடையாது.

சட்டமன்ற உறுப்பினர்கள் யார் என்றும் தெரியாது, சட்டமன்ற உறுப்பினரின் பெயரும் தெரியாது. இந்த லட்சணத்தில் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அரசுப் பணத்தில், மக்களின் வரிப்பணத்தில் கார் வாங்கித் தரப் போகிறாராம்.

ஆனால், நம்முடைய தலைவர் தெளிவாக ஒரு முடிவு எடுத்தார். ஆட்சிக்கு வந்தவுடனே முதல் நாள் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ளும்போதே என்ன சொன்னீர்கள்? தி.மு.க. கஜானாவைத் துடைத்து வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள், அரசிடம் பணமே கிடையாது என்று இந்த முதலமைச்சர் சொன்னாரா இல்லையா? இப்போது எங்கிருந்து கார் வாங்குவதற்குப் பணம் வந்தது?

விவசாயிகளின் கடனைத் தள்ளுபடி செய்வேன், 100 சதவிகிதம் தள்ளுபடி செய்வேன் என்று சொன்னீர்களா இல்லையா? இன்றைக்கு நிதி இல்லை என்று சொல்லி அந்தத் திட்டத்தையும் உங்களால் செய்ய முடியவில்லை. ஆனால், இன்றைக்கு எங்கிருந்து கார் வாங்கித் தருவதற்குப் பணம் வந்தது?

நம்முடைய தலைவர் சொன்னார், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் எங்களுக்கு இந்த அரசு வாங்கித் தருகின்ற அந்த கார் தேவையில்லை என்றுதான் சொன்னோம். அதற்கு உடனே ஒரு அமைச்சர் எழுந்து கத்துகிறார், அது எப்படி நீங்கள் கார் வேண்டாம் என்று சொல்லலாம்? ஐயா, எங்களுக்குத் தரவேண்டிய கார்தான் வேண்டாம் என்று சொன்னோம், நீங்கள் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னோம்.

எதற்கெடுத்தாலும் தொகுதி மறுவரையறை என்று இன்றைக்கு நமக்கு பாடம் எடுக்கிறார்கள். இந்தத் தொகுதி மறுவரையறையை எதிர்த்து, இந்தியாவிலேயே குரல் கொடுத்த முதல் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம், குரல் கொடுத்தவர் நம்முடைய தலைவர். எப்போது? 2024-ஆம் ஆண்டு தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறோம். சென்ற ஆண்டு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறோம். நம்முடைய தலைவர் அந்த வரைவுச் சட்டத் திருத்தத்தைத் தெருவில் இறங்கி அதைக் கொளுத்திப் போட்டார், அந்த வரைவுச் சட்டத் திருத்தத்தை எரித்து எதிர்ப்பு தெரிவித்தோம். நாம் எதிர்ப்பு தெரிவித்த காரணத்தினால்தான் ஏப்ரல் மாதம் அந்தத் திட்டத்தையே பா.ஜ.க கைவிட்டது.

### தொகுதி மறுவரையறை சட்டம்

தொகுதி மறுவரையறை வரைவுச் சட்டத் திருத்தத்தை, நம்முடைய தலைவரும் நானும் அதை எரித்தோம். இன்றைக்கு நமக்கு இந்த அரசு பாடம் எடுத்துக்கொண்டு இருக்கிறது. இந்த அரசுக்கு ஒரு சரியான பாடத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டிய நேரத்தில் நிச்சயம் கற்றுக்கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நம்முடைய தலைவர் தமிழ்நாட்டை வளர்கின்ற மாநிலங்களில் முதல் இடத்திற்குக் கொண்டு வந்து வைத்தார். 11.19 சதவிகித வளர்ச்சியுடன் நம்முடைய தலைவர் அவர்கள் தமிழ்நாட்டைக் கொண்டு வந்து நிறுத்தினார். இன்றைக்குத் தமிழ்நாட்டின் வளர்ச்சி மிகப்பெரிய ஒரு பாதாளத்துக்குச் சென்றுகொண்டு இருக்கிறது. எனவே, இதற்கெல்லாம் ஒரு சரியான விடிவுக்காலம் நிச்சயம் வெகு விரைவில் பிறக்கும் என்று கூறிக்கொண்டு வாய்ப்பளித்த அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து, தமிழ்நாட்டைக் காப்பாற்ற வேண்டிய, பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கு மட்டுமில்லை, இங்கு வந்திருக்கின்ற உங்கள் அத்தனைப்பேருக்கும் சேர்ந்து இருக்கிறது என்பதைத் தெரிவித்து, நலத்திட்ட உதவிகளைப் பெற்ற அத்தனைப்பேருக்கும் மீண்டும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு, வாய்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

கலைஞர் புகழ் ஓங்கட்டும்.

நன்றி, வணக்கம்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினரும் கழகத்தின் விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன், சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், ரவிச்சந்திரன், மாவட்டக் கழக நிர்வாகிகள் ஏகப்பன், புனிதவதி, ஜி.எம்.தேவன், ஆஷாத், மாநில நிர்வாகிகள் தமிழன் பிரசன்னா, ஷேக் அப்துல்லா, வழக்கறிஞர் சந்துரு, செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், மகேஷ்குமார், பகுதிக் கழகச் செயலாளர்கள் ராஜசேகர், முரளி, ஐ.சி.எஃப்.முரளி, வாசு, கூ.பி.ஜெயின், டி.எஸ்.பி.இராஜகோபால், நாகராஜ், சுதாகர், தமிழ்வேந்தன், சாமிக்கண்ணு, இப்ராஹிம் கனி, கலைச்செல்வி, போஸ், மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் மருத்துவர் சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர்கள் பி.கே. மூர்த்தி, சரிதா மகேஷ்குமார், ஸ்ரீராமுலு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் `வானவில்' விஜய், துணை அமைப்பாளர்கள் வினோத், ஜெகதீஷ், பாலமுருகன், தனசேகர், சங்கர் நானா, ராக்கி உசைன், வட்டக் கழகச் செயலாளர்கள் சதீஷ்குமார், பிரபாகர், மாமன்ற உறுப்பினர்கள் ராஜேஷ் ஜெயின், பரிமளம், மருத்துவர் பூர்ணிமா உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.